Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, மார்ச் 07 2024 | இதழ் 236

# காங்கிரஸ், ம.தி.மு.க., வி.சி.க. தொகுதி பங்கீட்டில் சிக்கல் நீடிப்பு சமாளிப்பது எப்படி? ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, 07 மார்ச் 2024: நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிடும் காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தை கட்சிகளுக்கு தொகுதி பங்கீட்டில் சிக்கல் நீடிப்பதால் தொகுதி பங்கீடு செய்யும் தி.மு.க. குழுவுடன் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் இன்று பேச்சுவார்த்தை நடத்தினார்.

நாடாளுமன்ற தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தமிழ்நாட்டில் அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. தேர்தல் தேதி குறித்தான அறிவிப்பு இன்னும் சில நாட்களில் வெளியாக உள்ளது.

தி.மு.க., அண்ணா தி.மு.க., காங்கிரஸ், பா.ஜ.க., பா.ம.க., தே.மு.தி.க., விடுதலை சிறுத்தைகள், அ.ம.மு.க. உள்பட பல்வேறு கட்சிகள் தேர்தல் கூட்டணி, தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்த முறை தி.மு.க. கூட்டணியில் இருந்து ஐஜேகே விலகியதால், அதற்கு பதில் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியை சேர்க்க முடிவெடுத்துள்ளது. மேலும் 23 இடங்களில் தி.மு.க. போட்டியிடவும், 17 இடங்களை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கவும் முடிவெடுத்தது.

அதேபோல், போட்டியிடும் தொகுதிகளில் சிலவற்றை மாற்றி பெற்றுக் கொள்ளவும் தீர்மானித்திருந்தது. இதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், ம.தி.மு.க., கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன.



இதில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ராமநாதபுரம் தொகுதியும், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு நாமக்கல் தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல், மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சிகளுக்கு இன்னும் தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. தொகுதி பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தையில் இழுபறி நீடித்து வருகிறது.

காங்கிரஸ் கட்சிக்கு 6 மற்றும் புதுச்சேரி, வி.சி.க.வுக்கு 2, ம.தி.மு.க.வுக்கு 1 தொகுதிகளை ஒதுக்கும் வகையில் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. மேலும், காங்கிரஸ் கட்சி தனக்கு ஒதுக்கப்படும் தொகுதியில் ஒன்றை மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு வழங்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது.

ஆனால், இதை காங்கிரஸ் ஏற்கவில்லை. இது தவிர, வி.சி.க. தனக்கு கூடுதலாக ஒரு பொதுத்தொகுதியை வழங்குவதுடன், மூன்றிலும் தங்கள் சின்னத்தில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என தெரிவித்தது.

ம.தி.மு.க.வும் தங்களுக்கு ஒதுக்கப்படும் தொகுதியில் பம்பரம் சின்னத்தில்தான் போட்டியிடுவோம் என்றும், மாநிலங்களவை இடம் தருவதாக இப்போதே உடன்படிக்கை செய்ய வேண்டும் என்றும் உறுதியாக உள்ளது. இந்த நிலையில் ம.தி.மு.க. நிர்வாக குழு அவசர கூட்டம் வைகோ தலைமையில் இன்று சென்னையில் நடந்தது. இதில் தொகுதி பங்கீடு மற்றும் எந்த தொகுதியில் போட்டியிடுவது என ஆலோசிக்கப்பட்டது.

காங்கிரஸ், ம.தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கு கடந்த முறையை விட குறைவான தொகுதிகளை ஒதுக்க தி.மு.க. முன் வருவதால் அக்கட்சிகள் தொகுதி பங்கீட்டு குழுவை சந்திக்க ஆர்வம் காட்டவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனிடையே பேச்சுவார்த்தை நடத்த மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருக்கு தி.மு.க. அழைப்பு விடுத்துள்ளது.

இந்த நிலையில், தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், வி.சி.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு இன்னும் இறுதியாகாத நிலையில், தி.மு.க. தொகுதிப் பங்கீட்டு குழுவுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வருகிறார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று நடைபெற்ற ஆலோசனையில் தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன், டி.ஆர்.பாலு எம்பி, ஆ.ராசா எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். கூட்டணிக் கட்சிகள் கேட்கும் தொகுதிகள் என்னென்ன என்பது பற்றியும், காங்கிரஸ், வி.சி.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்படாதது குறித்தும் நிர்வாகிகளிடம் முதலமைச்சர் கேட்டறிந்தார்.

தொகுதிப் பங்கீட்டில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

# பாஜக கூட்டணிக்கு 378 இடங்கள்: புதிய கருத்துக்கணிப்பில் தகவல்

சென்னை, 07 மார்ச் 2024: நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி 378 இடங்களில் வெற்றிபெறும் என்று கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமர் பதவியை ஏற்பார் என்றும் கூறியுள்ளது.




நாடாளுமன்ற தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. அந்த வகையில் இந்தியா டிவி-சிஎன்எக்ஸ் கருத்து கணிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி மொத்தமுள்ள 543 இடங்களில் 378 இடங்களில் வெற்றிபெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் இந்தியா கூட்டணிக்கு 98 இடங்கள் மட்டுமே கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி 5 முதல் 23 வரை 543 பாராளுமன்ற தொகுதிகளில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பா.ஜ.க. கடந்த நாடாளுமன்ற தேர்தலைக் காட்டிலும் இப்போது நடைபெறும் தேர்தலில் அதிக இடங்களை கைப்பற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குஜராத் (26), மத்திய பிரதேசம் (29), ராஜஸ்தான் (25), அரியானா (10), டெல்லி (7), உத்தரகாண்ட் (5), இமாச்சல பிரதேசம் (4) ஆகிய மாநிலங்களில் உள்ள அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளையும் பா.ஜ.க.வே கைப்பற்றும். பீகாரில் உள்ள 40 தொகுதிகளில் 17 இடங்களையும், ஜார்க்கண்டில் 14ல் 12 தொகுதிகளிலும், ஒடிசாவில் 21 தொகுதிகளில் 10 இடங்களிலும் பா.ஜ.க. வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க. ஆளும் கட்சியாக உள்ள அசாமில் 14 தொகுதிகளில் 10 இடங்கள் அக்கட்சியின் வசமாகும். மகாராஷ்டிராவில் 48ல் 25 தொகுதிகளையும், மேற்கு வங்கத்தில் 42ல் 20 தொகுதிகளையும் பா.ஜ.க. கைப்பற்றும். திரிணாமூல் காங்கிரஸ் கட்சி 21 இடங்களைப் பெறும் என்று இந்தியா டி.வி-சி.என்.எக்ஸ் கருத்து கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# ஓட்டேரி நல்லா கால்வாயில் டிரோன் மூலம் கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் பணி: அமைச்சர் சேகர்பாபு தொடங்கி வைத்தார்

பேராசிரியர் அன்பழகன் நினைவு நாள்: ஸ்டாலின் மலர் தூவி மரியாதை



சென்னை, 07 மார்ச் 2024: அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா திரு.வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட ஓட்டேரி நல்லா கால்வாயில் டிரோன் மூலம் கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆணையாளர் வி.ஜெயசந்திர பானுரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் புனிதவதி, எல்.ரமணி, மாநகர அலுவலர் எம்.ஜெகதீசன், தலைமைப் பூச்சித்தடுப்பு அலுவலர் செ.செல்வகுமார், மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேயர் பிரியா செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்திற்கு பிறகு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள், நீர்நிலைகள், கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்களில் தொடர்ந்து கொசு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் அடிப்படையில் தற்போது கொசுப்புகை மருந்து அடித்தல், கொசுக்கொல்லி மருந்து தெளித்தல் பணிகள் வீடுவீடாக சென்று தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஓட்டேரி நல்லா கால்வாயில் ட்ரோன் மூலம் கொசு மருந்து தெளித்தல் பணி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கொசு ஒழிப்பு பணிக்கென 410 மருந்து தெளிப்பான்கள், 109 பவர் ஸ்ப்ரேயர்கள், பேட்டரி மூலம் இயங்கும் 287 ஸ்ப்ரேயர்கள், 219 கையினால் இயங்கும் புகைப்பரப்பும் இயந்திரங்கள், 8 சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள், வாகனங்களில் பொருத்தப்பட்ட 68 புகைப்பரப்பும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு வட்டாரத்திற்கு இரண்டு என 6 ட்ரோன் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆண்டும் 6 ட்ரோன் இயந்திரங்கள் மூலம் கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளில் கொசு மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மலேரியா பணியாளர்கள் மூலம் வீடுவீடாகச் சென்று கொசுப்புழு வளரிடங்களான, மேல்நிலை, கீழ்நிலைத்தொட்டி, கிணறு, தேவையற்ற பொருள்கள் (டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் குடங்கள் போன்றவைகள்) ஆகியவற்றை கண்டறிந்து கொசுப்புழுக்கள் இருப்பின் அதனை அழித்திடும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பொதுமக்களும் தங்கள் சுற்றுப்புறத்தை தூய்மையாகப் பராமரித்திட தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பிளீச்சிங் பவுடர் பாக்கெட்டுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் வரை 31 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த ஆண்டு டெங்கு பாதிப்பு குறைந்து இதுவரை 18 நபர்களுக்கு மட்டுமே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மேயர் தெரிவித்தார்.

# பேராசிரியர் அன்பழகன் நினைவு நாள்: ஸ்டாலின் மலர் தூவி மரியாதை



சென்னை, 07 மார்ச் 2024: சென்னை அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் நிதி அமைச்சர் அன்பழகனின் நினைவு நாளையொட்டி அவரது திருஉருவ படத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தி.மு.க. பொதுச்செயலாளராக இருந்த பேராசிரியர் க.அன்பழகன் கடந்த 2020ம் ஆண்டு மார்ச் 7-ம் தேதி காலமானார். அவரது 4-ம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

பேராசிரியர் அன்பழகனின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

குலையா உறுதி, அசையாக் கொள்கை, தாழா மானம், மங்கா உணர்வு, மாறா நட்பு, மறையாப் புகழ் என இனி வரும் இயக்கத்து இளைஞர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் வாழ்ந்த இனமானப் பேராசிரியர் நினைவுநாள்.

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. காலம் முதல் பொதுக்குழுவில் என்னைக் கழகத் தலைவராக அறிவித்தது வரை என் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அவர் நிறைந்திருக்கிறார். என் நெஞ்சில் என்றும் நீங்காதிருப்பார். அவர்தம் கொள்கைப் பெருவாழ்வு நம்மை வழிநடத்தும். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# மகளிர் தினம் 5 ஆயிரம் பெண் போலீசார் உலக சாதனை அணிவகுப்பு: கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் பாராட்டு




சென்னை, 07 மார்ச் 2024: சென்னையில் உலக மகளிர் தினத்தையொட்டி 5 ஆயிரம் பெண் போலீசார் உலக சாதனைக்காக அணிவகுத்து நின்ற காட்சி அரங்கேற்றப்பட்டது.

நாளை உலக மகளிர் தினத்தை யொட்டி நேற்று மாலை சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் போலீசார் ஒரு வித்தியாசமான உலக சாதனை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

சீருடை பணியாளர் தேர்வாணை யத்தின் டி.ஜி.பி. சீமா அகர்வால், போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் ஆகியோர் முன்னிலையில் விழா நடைபெற்றது.

பெண்கள் உதவி எண் 1091, பெண்கள் உதவி மைய எண் 181 மற்றும் அவள் திட்டம், காவல் உதவி செயலி போன்ற எண்களும், எழுத்துகளும் வடிவமைப்பு செய்து 5 ஆயிரத்து 50 பெண் போலீசார் ஒரே நேரத்தில் அணிவகுத்து நின்றனர். இது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. 'டிரோன்' கேமரா மூலம் இந்த காட்சி படம் பிடிக்கப்பட்டு ஒளிபரப்பு செய்யப்பட்டது.

சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிறங்களில் 'டி-சர்ட்' அணிந்து பெண் போலீசார் இந்த அணிவகுப்பில் ஈடுபட்டனர். உலக சாதனையாக கருதப்படும் இந்த நிகழ்ச்சிக்கான சான்றிதழ் டி.ஜி.பி. சீமா அகர்வால், போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் ஆகியோரிடம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி யில் பேசிய போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர், 'சென்னை போலீஸ் துறையில் 26 சதவீதம் பெண் போலீசார் உள்ளனர். பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பு நகரம் சென்னை' என்றும் குறிப்பிட்டார்.

இணை கமிஷனர் கயல்விழி வரவேற்று பேசினார். முடிவில் மத்திய குற்றப்பிரிவு கூடுதல் கமிஷனர் செந்தில்குமாரி நன்றி தெரிவித்தார். அரங்கம் முழுவதும் பெண் போலீஸ் மயமாக காட்சி அளித்தது.

# தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழா ஜோதிகாவுக்கு சிறந்த நடிகை விருது: அமைச்சர்கள் வழங்கினார்கள்



சென்னை, 07 மார்ச் 2024: தமிழ்நாடு அரசு திரைப்பட விருது வழங்கும் விழாவில் ஜோதிகாவுக்கு அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் சிறந்த நடிகைக்கான விருதை வழங்கினார்கள்.

2015-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழா, சென்னை அடையாரில் நேற்று நடந்தது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமை தாங்கினார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். துணை மேயர் மகேஷ்குமார், மயிலாப்பூர் எம்.எல்.ஏ. வேலு, செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனர் ஆர்.வைத்தியநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் எல்.சுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் 2015-ம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படமாக 'தனி ஒருவன்' படத்துக்கு விருது வழங்கப்பட்டது. விருது மற்றும் ரூ.2 லட்சத்துக்கான காசோலையை படத்தின் இயக்குனர் மோகன் ராஜாவுக்கு அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிர மணியன் ஆகியோர் வழங்கினர்.

2ம் இடம் 'பசங்க -2' படத்துக்கும், மூன்றாம் இடம் 'பிரபா' படத்திற்கும் வழங்கப்பட்டது. 'இறுதிச்சுற்று', '36 வயதினிலே' ஆகிய திரைப் படங்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.

சிறந்த நடிகருக்கான விருது மாதவனுக்கு (இறுதிச்சுற்று) வழங்கப்பட்டது. இந்த விருதை படத்தின் இயக்குனர் சுதா கொங்கரா பெற்றுக்கொண்டார். சிறந்த நடிகைக்கான விருது '36 வயதினிலே' படத்தில் நடித்த ஜோதிகாவுக்கு வழங்கப்பட்டது.

விருதை பெற்றுக்கொண்ட ஜோதிகா பேசும்போது, "சிறந்த படத்தில் நடித்ததற்காக சிறந்த விருது கிடைத்திருக்கிறது. இது எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி அளிக்கிறது. '36 வயதினிலே' என் வாழ்நாளில் மறக்க முடியாத படம். பெண்களின் பெருமைகளை எடுத்துச்சொல்லும் இது போன்ற படங்களில் நிறைய நடிக்க ஆசைப்படுகிறேன். அது கண்டிப்பாக நடக்கும் என்று நம்புகிறேன்" என்றார்.

சிறந்த நடிகருக்கான சிறப்பு பரிசு கவுதம் கார்த்திக்கிற்கும், சிறந்த நடிகைக்கான சிறப்பு பரிசு ரித்திகா சிங்குக்கும், சிறந்த வில்லன் விருது அரவிந்த்சாமிக்கும், சிறந்த நகைச்சுவை நடிகர் விருது சிங்கம் புலிக்கும், சிறந்த நகைச்சுவை நடிகை விருது தேவதர்ஷினிக்கும், குணச்சித்திர நடிகர் விருது தலைவாசல் விஜய்க்கும், குணச்சித்திர நடிகை விருது கவுதமிக்கும், சிறந்த இயக்குனர் விருது சுதா கொங்கராவுக்கும் வழங்கப்பட்டது.

சிறந்த கதையாசிரியர் - மோகன் ராஜா (தனி ஒருவன்), சிறந்த இசையமைப்பாளர்- ஜிப்ரான் (உத்தம வில்லன்/ பாபநாசம்), சிறந்த பாடலாசிரியர்- விவேகா (36 வயதினிலே), சிறந்த பின்னணி பாடகர் - கானா பாலா (வை ராஜா வை), பின்னணி பாடகி- கல்பனா ராகவேந்தர் (36 வயதினிலே), சிறந்த ஒளிப்பதிவாளர்- ராம்ஜி (தனி ஒருவன்) ஆகியோர் விருது பெற்றனர்.

சிறந்த ஒலிப்பதிவாளர்- ஏ.எல்.துக்காராம், ஜெ.மகேஸ்வரன் (தாக்க தாக்க), சிறந்த எடிட்டர்- கோபி கிருஷ்ணா (தனி ஒருவன்), சண்டை பயிற்சியாளர்- ரமேஷ் (உத்தம வில்லன்), நடன ஆசிரியர்- பிருந்தா (தனி ஒருவன்), ஒப்பனை கலைஞர்- சபரி கிரீஷன் (36 வயதினிலே/ இறுதிச்சுற்று), தையல் கலைஞர்- வாசுகி பாஸ்கர் (மாயா), சிறந்த குழந்தை நட்சத்திரம்- நிஷேஸ், வைஷ்ணவி (பசங்க-2), சிறந்த பின்னணி குரல் (ஆண்) - கவுதம் குமார் (36 வயதினிலே), சிறந்த பின்னணி குரல் (பெண்) -ஆர்.உமா மகேஸ்வரி (இறுதிச்சுற்று) ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

இதே போன்று தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு 2014 - 15-ம் ஆண்டுக்கான விருதும் வழங்கப்பட்டது. இதில் சிறந்த இயக்குனராக மோகன்குமார், சிறந்த ஒளிப்பதிவாளராக விக்னேஷ் ராஜகோபாலன், சிறந்த ஒலிப்பதிவாளராக சதீஷ், சிறந்த படத்தொகுப்பாளராக முரளி, சிறந்த படம் பதனிடுபவராக சந்தோஷ் குமார் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. விருது பெற்ற அனைவருக்கும் காசோலை, தங்கப்பதக்கம், நினைவு கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# ஜனவரி 2024 இல், டாடா அசெட் மேனேஜ்மென்ட் இன் பங்கு மற்றும் ஆர்பிட்ரேஜ் ஃபண்ட்களில் ரூபாய் 1,907 கோடியின் கணிசமான நிகர உள் வரத்துகளுக்கு தமிழ்நாடு 6% பங்களித்தது

சென்னை, 07 மார்ச் 2024: அஸோஸியேஷன் ஆஃப் மியூச்சுவல் ஃபண்ட்ஸ் இன் இந்தியா ஏஎம்எஃப்ஐ வெளியிட்ட சமீபத்திய தரவுகளின்படி, ஜனவரி 2024 இல் ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்டுகள் ரூ. 21,780.56 கோடியின் ஒரு நிகர வரத்தைக் கண்டுள்ளன. சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்த தரவு, ஜனவரி 2024 இல் முதலீட்டாளர்களின் இந்த முதலீட்டு வழிக்கான விருப்பத்தை உறுதிப்படுத்துகின்ற ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்ட் பிரிவின் தொடர்ச்சியான வளர்ச்சியை முக்கியப்படுத்துகிறது. ஒட்டுமொத்தமாக, இந்தியாவில் உள்ள மியூச்சுவல் ஃபண்ட் துறையானது, அனைத்து திட்டங்களிலும் மொத்த நிர்வாகத்தின் கீழ் (ஏயுஎம்) சொத்துக்கள் ரூ. 52.89 இலட்சம் கோடியைப் பதிவு செய்துள்ளது.

ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்ட் வகையை பிரித்து, மிட் கேப் பிரிவில் கணிசமான அளவு 2,061 கோடி ரூபாய் வரத்தைக் கண்ட அதே வேளையில் ஸ்மால்-கேப் ஃபண்டுகள் ரூபாய் 3,527 கோடியை ஈர்த்தது. நிகர வரத்துகள் முறையே ரூ. 4,804.7 கோடி மற்றும் ரூ. 2,447 கோடி ஆகியவற்றுடன், துறைசார்/கருப்பொருள் நிதிகள் மற்றும் ஃப்ளெக்ஸி-கேப் வகைகளும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தன. இந்த வகைகளின் இந்த நேர்மறையான போக்கு முதலீட்டாளர்களின் பரந்த அளவிலான ஆர்வங்களை முக்கியப்படுத்திக்காட்டுகிறது.

ஜனவரி 2024 இல் 7.92 கோடி எஸ்ஐபி கணக்குகள் மூலம் 18,838 கோடி ரூபாய் சேகரிக்கப்பட்டதன் மூலம் மியூச்சுவல் ஃபண்டுகளுக்கான நீடித்த உற்சாகம் ஒரு குறிப்பிடத்தக்க போக்காக இருக்கிறது.

ஜனவரி 2024 இல் ஈக்விட்டி மற்றும் ஆர்பிட்ரேஜ் ஃபண்டுகளில் ரூ. 1,907 கோடியின் நிகர வரத்துகளைப் பதிவு செய்து, டாடா அசெட் மேனேஜ்மென்ட் கவனத்தை ஈர்த்தது, சுவாரஸ்யமாக, இந்த தொகையில் தமிழ்நாடு 6% பங்களித்தது. 2023 டிசம்பரில் கடன் நிதிகள் ஒரு பிரிவாக, ரூ. 76,469 கோடி நிகர வரத்தைக் கண்டாலும், டாடா அசெட் மேனேஜ்மென்ட் இன் டெப்ட் மியூச்சுவல் ஃபண்ட்கள் 2024 ஜனவரியில் 2,678 கோடி ரூபாயை நிகர பங்களிப்பைக் கண்டது. " ஸ்மால் மற்றும் மிட் கேப் ஃபண்டுகள் ஆகிய இரண்டும் கடந்த சில மாதங்களில் முதலீட்டாளர்களின் தொடர்ச்சியான ஆர்வத்தைக் கண்டன. உண்மையில் மற்ற வகைகளுடன் ஒப்பிடுகையில் இந்த நிகர வரத்து நிலையானதாகவும் மற்றும் கணிசமானதாகவும் இருந்து வருகிறது. மிட் மற்றும் ஸ்மால் கேப் பிரிவுகளின் மதிப்பீடு தற்போது சற்று உயர்த்தப்பட்டதாக தோன்றினாலும், பணப்புழக்கம் (பங்குகளில்) மற்றும் எதிர்கால மதிப்பீடுகள் யதார்த்தமானதாக இருக்கும் பல சிறந்த முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்கத்தின் மூலதனச் செலவு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், அதே காலகட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மானியங்கள் குறைந்துள்ளன. இவை சாதகமான போக்கைத் தீவிரப்படுத்தி பொருளாதாரத்தை மேலும் முன்னேற்றும். இதன் விளைவாக, உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்திப் பிரிவுகளில் நிறுவனங்கள் முழுவதிலும் அதிக வளர்ச்சி விகிதங்களைக் காண நாங்கள் எதிர்பார்க்கிறோம்," என்று டாடா அசெட் மேனேஜ்மென்ட் இன் மூத்த நிதி மேலாளர் சந்திரபிரகாஷ் படியார் கூறினார்.

# பாலிகேப் மேக்ஸிமா+ க்ரீன் வயர் க்கான புதிய டிவிசி ஐ பாலிகேப் அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 07 மார்ச் 2024: ஒரு முன்னணி எலக்ட்ரிக்கல் பொருட்கள் நிறுவனமான பாலிகேப் இந்தியா, எக்ஸ்ட்ரா சேஃப் பாலிகேப் மாக்சிமா+ க்கான பாலிகாப்மேக்ஸிமா+ க்ரீன் வயர் ஐ காட்சிப்படுத்துகின்ற தெற்கு சந்தைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட அதன் சமீபத்திய தொலைகாட்சி விளம்பரத்தை (டிவிசி) அறிமுகம் செய்வதை பெருமையுடன் அறிவித்தது. இந்த பிரச்சாரத்தின் மூலம், பாலிகேப், புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. நுகர்வோர் தங்கள் வீடுகளின் பாதுகாப்பிற்காக முன்னுரிமை கொடுக்கவும் மற்றும் புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்க ஊக்குவிக்கிறது. இந்த டிவிசி வீட்டுக் கட்டுமானத்தில் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, ஒருவரின் கனவு இல்லத்திற்கு சரியான வயரிங் தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் வழக்கமான நடைமுறைகளை நவீன பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் இணைக்கிறது.

பாலிகேப் இன் சமீபத்திய பிரச்சாரம், அதன் தீர்வுகளுடன் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை முக்கியப்படுத்திக் காட்டுகின்ற அதன் முந்தைய பிரச்சாரத்தின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டது. வயர்கள் வெறும் மின்சாரத் தீர்வுகள் மாத்திரமல்ல , ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பை உறுதிசெய்கின்ற இன்றியமையாத கூறுகள் என்பதை இந்த டிவிசி வலியுறுத்துகிறது. ஓகில்வி இந்தியா நிறுவனம் மூலம் கருத்துருவாக்கம் செய்யப்பட்ட இந்த டிவிசி பாதுகாப்பான வயர்களின் முக்கியத்துவத்தை அழகாக விளக்குகிறது. பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளையில், நுகர்வோரை பெரிய கனவுகளைக் காண ஊக்குவிப்பதன் மூலம், வயர்கள் மற்றும் கேபிள்களின் நீட்டிக்கப்பட்ட மதிப்பு முன்மொழிவுகள் பற்றி நவீன கால நுகர்வோருக்கு கல்வி கற்பிப்பதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் பாலிகேப் இன் பணியை இந்த பிரச்சாரம் செய்கிறது.

பூமி பூஜை போன்ற பாரம்பரிய சடங்குகளை உன்னிப்பாகச் செய்து, திருஷ்டி பொம்மை போன்ற பாதுகாப்பு அலங்காரங்களை வைப்பது மற்றும் தீய கண்களைத் தடுக்க வெள்ளை பூசணிக்காயை உடைப்பது போன்ற அவர்களின் கனவு வீட்டைக் கட்டத் தொடங்கும் ஒரு குடும்பத்தின் செயல்முறையை இந்த டிவிசி பின்பற்றுகிறது. எவ்வாறாயினும், கடவுளின் குரல் அந்த குடும்பத்தை, அவர்கள் கவனிக்காமல் இருந்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான பாதுகாப்பு அம்சமான எலெக்ட்ரிக்கல் வயரிங் பற்றி கேள்வி எழுப்பும்போது இந்த கதை ஒரு சிந்தனையைத் தூண்டும் திருப்பத்தை எடுக்கிறது. இந்த முக்கிய தருணமானது, ஒருவரின் கனவு இல்லத்தின் பாதுகாப்பை உறுதிசெய்ய, வயரிங் தேர்வு உட்பட விவரங்களுக்கான கவனம் மிக அவசியம் என்ற பாலிகேப் இன் செய்தியை முன்னிலைப்படுத்துகிறது. 5-இன்-1 கிரீன் ஷீல்ட் தொழில்நுட்பத்துடன் கூடிய பாலிகேப் மாக்சிமா+ கிரீன் வயர், கூடுதல் பாதுகாப்பையும் மன அமைதியையும் வழங்குகிறது. இந்த டிவிசி, அவர்களின் வீடுகளில் பாரம்பரியம் மற்றும் பாதுகாப்பு ஆகிய இரண்டிற்கும் முன்னுரிமை அளிக்கும் வீட்டு உரிமையாளர்களுடன் ஒத்திசைகின்ற பாரம்பரியத்தின் சாரத்தை, நவீன பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் பின்னிப்பிணைத்துள்ளது, இந்த பிரச்சாரத்தைப் பற்றிப் பேசுகையில், பாலிகேப் இந்தியா வின் நிர்வாகத் தலைவரும், தலைமை வணிக அதிகாரியுமான இஷ்விந்தர் சிங் குரானா, “மின்சார தீர்வுகளில் ஒரு முன்னணியாளராக இருக்கும் பாலிகேப் நிறுவனம், புதுமைகளை வளர்ப்பதற்கும், எங்கள் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் உறுதிபூண்டுள்ளது. பாலிகாப்மாக்சிமா+ கிரீன் வயர் க்கான எங்கள் சமீபத்திய பிரச்சாரத்தின் மூலம், நுகர்வோர் தங்கள் வீடுகளுக்கு புத்திசாலித்தனமான முடிவுகளை எடுப்பதற்கு அதிகாரம் அளிப்பதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். எங்கள் பாலிகாப்மேக்ஸிமா + கிரீன் வயர் தரம் மற்றும் பாதுகாப்பிற்கான எங்கள் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக இருக்கிறது. இந்த பிரச்சாரத்தின் மூலம், நாங்கள் பாதுகாப்பான வயரிங் இன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது மட்டுமல்லாமல், வீட்டு உரிமையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளை பிரதிபலிக்கின்ற பாரம்பரியத்தை சமகாலத்துடன் இணைக்கிறோம். பாலிகேப் இல், ஒவ்வொரு வீடும் மிக உயர்ந்த அளவிலான பாதுகாப்பிற்கு தகுதியானது என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் வரவிருக்கும் சந்ததியினருக்கான கனவுகளை பாதுகாக்கும் தீர்வுகளை வழங்குவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்." என்று கூறினார். பாலிகாப்மாக்சிமா+ கிரீன் வயர் திரைப்படம் கன்னடம், மலையாளம், தமிழ் மற்றும் தெலுங்கு செய்தி சேனல்கள் முழுவதும் பாலிகேப் இந்தியாவின் சமூக ஊடகக் கையாளுதல்களுடன் ஒளிபரப்பப்படும்.

# 22-ந்தேதி மீண்டும் தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி



சென்னை, 07 மார்ச் 2024: நாடாளுமன்ற தேர்தல் தேதி நெருங்கி வரும் சூழலில், பிரதமர் மோடி மீண்டும் தமிழகம் வர உள்ளதாக தெரிகிறது. அதன்படி வரும் 22ம் தேதி தமிழகத்தில் நடைபெறும் பா.ஜ.க. பொதுக்கூட்டம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரதமர் மோடி கடந்த ஜனவரி மாதத்தில் 2 முறை தமிழகம் வந்து சென்றார். 3-வது முறையாக 2 நாள் பயணமாக கடந்த மாதம் 27ம் தேதி பிரதமர் மோடி தமிழகம் வந்தார். அப்போது பல்லடத்தில் நடைபெற்ற ‘என் மண் என் மக்கள்’ யாத்திரை நிறைவு விழா பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

அன்று மாலை மதுரையில் நடந்த நிகழ்ச்சியிலும், மறுநாள் தூத்துக்குடியில் நடந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்ற மோடி, நிறைவாக திருநெல்வேலியில் நடந்த பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

இதனயடுத்து 5 நாட்கள் கழித்து மீண்டும் தமிழகம் வந்த பிரதமர் மோடி கடந்த 4ம் தேதி சென்னையில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார். இந்நிலையில் 5வது முறையாக மீண்டும் தமிழ்நாடு வருகிறார் பிரதமர் மோடி.

ஒரு சில வாரங்களில் தேர்தல் அறிவிப்பு வெளியாக உள்ள நிலையில் தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக பிரதமர் மோடி தமிழகம் வருகிறார்.

தென் மாவட்டங்களில் நடைபெறவுள்ள பா.ஜ.க. பொதுக்கூட்டம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார். கடந்த 3 மாதத்தில் பிரதமர் மோடி தமிழகம் வருவது இது 5வது முறையாகும்.

# டாடா மோட்டார்ஸ் டாடா ஸ்டீலுக்கான, சுற்றுச் சூழலுக்கு உகந்த அதன் அடுத்த தலைமுறை, வணிக வாகனங்களை அறிமுகம் செய்துள்ளது

சென்னை, 07 மார்ச் 2024: இந்தியாவின் மிகப் பெரிய வணிக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ், அதன் அடுத்த தலைமுறை, பசுமை-எரிபொருள் ஆற்றல் இயங்கும் வணிக வாகனங்களை டாடா ஸ்டீல் நிறுவனத்திற்கு இன்று அறிமுகப்படுத்தியது. இந்த வாகனங்கள் தொகுப்பில் பிரிமா றி கூஷீ வீ னீ ணீ டிராக்டர்கள், டிப்பர்கள் மற்றும் அல்ட்ரா ஈவி பஸ் ஆகியவை அடங்கும், இவை திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) மற்றும் பேட்டரி மின்சார தொழில் நுட்பங்களால் இயக்கப்படுகின்றன. ஜாம்ஷெட்பூரில் நடைபெற்ற டாடா குழுமத்தின் நிறுவனர் தினவிழாவின் ஒரு பகுதியாக, டாடாசன் நிறுவனத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் இந்த வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார். விழாவில் டாடா ஸ்டீல் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர் டி.வி.நரேந்திரன் மற்றும் டாடா மோட்டார்ஸ் நிர்வாக இயக்குநர் கிரிஷ்வாக் மற்றும் அதன் தலைமைக்குழுக்களின் மூத்த உறுப்பினர்களுடன் கலந்து கொண்டனர்.

டாடா மோட்டார்ஸ் உடனான நீண்ட கால கூட்டாண்மை குறித்து பேசிய டாடா ஸ்டீலின் தலைமை செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குனர் டி.வி.நரேந்திரன் அவர்கள்: டாடா மோட்டார்ஸுடனான எங்களது நீண்ட கால கூட்டாண்மையில் இந்த டெலிவரி மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிக்கிறது. எங்கள் அந்தந்த தொழில்களில் தலைவர்களாக, டாடா ஸ்டீல் மற்றும் டாடா மோட்டார்ஸ் ஆகியவை நிலைத்தன்மை மற்றும் புதுமைக்கான பொதுவான பார்வையைப் பகிர்ந்து கொள்கின்றன. எங்கள் கூட்டு நிபுணத்துவம் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம், நாங்கள் எங்கள் தொழில்களில் புரட்சியை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் பொறுப்பிலும் முன்னணியில் இருக்கிறோம். ஒன்றாக, நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், சுற்றுச்சூழல் நட்பு தீர்வுகளை வழங்குவதற்கும் நாங்கள் உறுதி பூண்டுள்ளோம், இது எங்கள் வணிகங்களுக்கு பயனளிப்பது மட்டுமல்லாமல், பசுமையான நாளையும் பங்களிக்கிறது" என்று கூறினார்.

எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் வாகனங்களைக் கொடியசைத்து துவக்கி வைத்தது குறித்துப் பேசிய, டாடா மோட்டார்ஸின் நிர்வாக இயக்குநர் கிரிஷ்வாக் அவர்கள், "டாடா மோட்டார்ஸ் இந்தியாவில் நிலையான, பாதுகாப்பான மற்றும் ஸ்மார்ட் மொபிலிட்டியின் உலகளாவிய மெகா ட்ரெண்டை இயக்கி வருகிறது. எங்களின் பசுமையான வணிக வாகனங்கள், அதன் விநியோகச் சங்கிலி கார்பன் நடுநிலையாக்குவதற்கான டாடா ஸ்டீலின் முயற்சிகளை துரிதப்படுத்தும். செயல்பாடு, செயல்திறன், இணைப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முழுமையான தீர்வுகளை வடிவமைக்க அவர்களுடனும் அவர்களது போக்குவரத்து கூட்டாளர்களுடனும் நாங்கள் ஒத்துழைத்துள்ளோம். இந்த வாகனங்களின் ஒவ்வொரு அம்சமும் பல்வேறு கடமைச் சுழற்சிகள் மற்றும் சிறப்புப் பயன்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டுமென்றே அதிகரிக்கப்பட்டுள்ளது. 2045 ஆம் ஆண்டிற்குள் கார்பன் தடயத்தைக் குறைத்தல் மற்றும் நிகர-பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான எங்களது அந்தந்த தேடல்களில் எங்கள் வரலாற்று கூட்டாண்மையை வலுப்படுத்த நாங்கள் எதிர்நோக்குகிறோம்.” என்று கூறினார்.

டாடா மோட்டார்ஸின் புதிய காலகட்ட வர்த்தக வாகனங்கள் மேம்பட்ட டிரைவர் அசிஸ்டன்ஸ் சிஸ்டம் (ஏடிஏஎஸ்), எலக்ட்ரானிக்ஸ் டெபிலிட்டி கன்ட்ரோல், ஆக்டிவ் டிராக்ஷன் கன்ட்ரோல் மற்றும் டிரைவர் மானிட்டரிங் சிஸ்டம் உள்ளிட்ட பல பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளன. எஃகு பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களை கொண்டு செல்வதற்காக டாடா ஸ்டீலின் டெலிவரி பார்ட்னர்களிடம் வாகனங்கள் ஒப்படைக்கப்பட்டன.

பல்வேறு பயன்பாடுகளுக்காக வடிவமைக்கப்பட்ட, டிப்பர்ஸ் (3530.கே) மற்றும் டிராக்டர்கள் (5530.எஸ்) உள்ளிட்ட டிரக்குகளின் டாடா ப்ரைமா எல்என்ஜி வரிசையானது மேற்பரப்பு, சுரங்கம் மற்றும் நீண்ட தூர வணிகப் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும். பேட்டரி-எலக்ட்ரிக் வரம்பை துரிதப்படுத்திய தன் ஒரு பகுதியாக, 28டி ஈவி டிப்பர் (ஈ28.கே) மற்றும் 46டி ஈவி டிராக்டர் (ஈ46.எஸ்) ஆகியவை டாடா ஸ்டீலின் லாஜிஸ்டிக் இயக்கத்தின்ஒருபகுதியாக நிஜ -உலக செயல் திறனை நிறுவுவதற்காக பயன்படுத்தப்படுகின்றன. பூஜ்ஜியம்-எமிஷன் டிரக்குகளுக்கு கூடுதலாக, நிறுவனம் டாடா அல்ட்ரா ஈவி பேருந்துகளை ஊழியர்களின் போக்குவரத்துக்காக, ஆலை இடங்களில் பயன்படுத்தத் தொடங்கும்.

டாடா மோட்டார்ஸ் பேட்டரி எலக்ட்ரிக், சிஎன்ஜி, எல்என்ஜி, ஹைட்ரஜன் இன்டர்னல் கம்பஷன் இன்ஜின் மற்றும் ஹைட்ரஜன் ஃபியூயல் செல், செல் தொழில் நுட்பம் உள்ளிட்ட மாற்று எரிபொருள் தொழில் நுட்பத்தால் இயக்கப்படும் புதுமையான இயக்கத் தீர்வுகளை உருவாக்கி தயாரித்து வருகிறது. இது ஆட்டோ எக்ஸ்போ 2023 மற்றும் பிப்ரவரி 2024 இல் பாரத் மொபிலிட்டி குளோபல் எக்ஸ்போவில் பல்வேறு பிரிவுகளில் பரந்த அளவிலான மாற்று எரிபொருளில் இயங்கும் வணிக வாகனங்களைக் காட்சிப்படுத்தியது. இன்று வரை, டாடா மோட்டார்ஸ் இந்தியாவில் உள்ள பல நகரங்களில் 2,000க்கும் மேற்பட்ட மின்சார பேருந்துகளை வழங்கியுள்ளது, அவை ஒட்டு மொத்தமாக 12 கோடி கிலோமீட்டர்களுக்கு மேல் பயணித்துள்ளன, இதன் இயக்க நேரம் 95% ஆகும்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# 2024-25 ஆம் ஆண்டுக்கான ஸ்டெம் கல்விப் பிரிவில் பெண்கள் ஸ்காலர்ஷிப் திட்டத்தை தொடங்கும் பிரிட்டிஷ் கவுன்சில்

சென்னை, 07 மார்ச் 2024: கல்விசார் வாய்ப்புகள் மற்றும் கலாச்சார உறவுகளுக்கான யுகே-யின் சர்வதேச அமைப்பான பிரிட்டிஷ் கவுன்சில், ஸ்டெம் (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) பிரிவில் பெண்களுக்கான பிரிட்டிஷ் கவுன்சில் ஸ்காலர்ஷிப்கள் திட்டம் தொடங்கப்படுவதை அறிவித்திருக்கிறது. யுகே-ல் தங்களது முதுகலை பட்டப்படிப்பை (மாஸ்டர்ஸ்) மேற்கொள்ள விரும்பும் பெண் ஸ்டெம் பட்டதாரிகளுக்காக கௌரவம் மிக்க இந்த ஸ்காலர்ஷிப் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. புத்தாக்கத்தை முன்னெடுக்கவும், வேறுபட்ட கண்ணோட்டங்களை உறுதிசெய்யவும், பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும் ஸ்டெம் பிரிவுகளில் பெண்களின் பரவலான பங்கு அத்தியாவசியமானது. பாலின ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதற்கும், தனித்துவமான திறன்களின் மூலம் பணியாளர் குழுவை செழுமையாக்கவும் பெண்களின் செயலிருப்பு உதவுகிறது; சமுதாயத்தின் நலனுக்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லவும் இது வகை செய்கிறது. வேர்ல்டு எக்கனாமிக் ஃபோரம் வெளியிட்ட உலக பாலின இடைவெளி அறிக்கை 2023 (<https://www.weforum.org/publications/global-gender-gap-report-2023/>) -ன் படி, இந்தியாவின் ஸ்டெம் பணியாளர் தொகுப்பில் பெண்களின் பங்கு 27% மட்டுமே. இந்தியாவில் ஏறக்குறைய 43% ஸ்டெம் பட்டதாரிகள் இருப்பதை கருத்தில் கொள்ளும்போது, பணியாளர் குழுவில் அவர்களின் பங்கு மிகக் குறைவானதே. இந்தியா மற்றும் பிற தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பெண் ஸ்டெம் பட்டதாரிகளுக்காக 25 ஸ்காலர்ஷிப்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. குயின் மேரி யுனிவர்சிட்டி ஆஃப் லண்டன், ஆங்கிலியா ரஸ்கின் யுனிவர்சிட்டி, க்ரீன்விச் யுனிவர்சிட்டி, தி யுனிவர்சிட்டி ஆஃப் சௌத்தாம்டன் மற்றும் கவென்ட்ரி யுனிவர்சிட்டி ஆகிய யுகே-ஐ சேர்ந்த 5 உயர்கல்வி நிறுவனங்களில் இவைகள் வழங்கப்படுகின்றன. ஸ்டெம் கல்விப் பிரிவில் அவர்களது உயர் கல்வியையும், கரியர்களையும் மேம்படுத்திக் கொள்வதற்கு இந்த ஸ்காலர்ஷிப்கள் பயனாளிகளுக்கு திறனதிகாரத்தை வழங்கும். யுகே-ன் புகழ்பெற்ற ஸ்டெம் கல்விப் பிரிவுகளில் கிடைக்கும் நிபுணத்துவத்தைப் பெறுவதன் வழியாக அவர்களது சொந்த நாட்டில் ஆராய்ச்சியையும், புத்தாக்கத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்கான திறனை இது அவர்களுக்கு ஏதுவாக்கும். குறிப்பிடத்தக்க சிறந்த ஆராய்ச்சிக்காக உலகளவில் தற்போது தரவரிசையில் மூன்றாவது இடத்தில் யுகே இருக்கிறது. யுகே-ல் பிரசுரிக்கப்படும் அனைத்து ஆராய்ச்சி கட்டுரைகளில் 55.2% பங்கு சர்வதேச ஆராய்ச்சி ஒத்துழைப்புகளின் விளைவாக உருவாகுபவை என்பது குறிப்பிடத்தக்கது. கல்விக்கட்டணம், ஸ்டைஃபண்டு, பயணச் செலவுகள், விசா, உடல்நலக் காப்பீடு கட்டணம் மற்றும் ஆங்கில மொழித்திறன் ஆதரவு ஆகியவை இந்த ஸ்காலர்ஷிப்பில் உள்ளடங்கும். தரவு அறிவியல், கணினி அறிவியல், மருந்து தயாரிப்பு அறிவியல், மின்னியல் மற்றும் மின்னணு பொறியியல், இயந்திரப் பொறியியல், பொறியியல் மேலாண்மை, சிவில் பொறியியல் மேலாண்மை, நுண்ணறிவான சுகாதாரப் பராமரிப்பு, உண்மை அறிவியல் போன்றவற்றில் பெண் பட்டதாரிகள் இந்த ஸ்காலர்ஷிப்பின் கீழ் முதுகலை பட்டப்படிப்பை யுகே-ல் மேற்கொள்ளலாம். பிரிட்டிஷ் கவுன்சில்-ன் எஜுகேஷன் இந்தியா பிரிவின் இயக்குனர் ரித்திகா சந்தா பரூக் எம்பிஈ பேசுகையில், “உலகின் மக்கள் தொகையில் பெண்களின் பங்கு ஏறக்குறைய பாதி அளவாகும்; ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புத்தாக்குனர்களின் சாத்தியத்திறனுள்ள அறிவாற்றலில் பாதியினை பெண்களே கொண்டிருக்கின்றனர். உலகம் எதிர்கொள்ளும் உலகளாவிய பெரும் சவால்களை ஆராய்ச்சி மற்றும் அறிவியலின் வழியாக மட்டுமே எதிர்கொண்டு தீர்வுகாண இயலும். மக்கள்தொகையில் ஒரு பாதி பிரிவினர் மட்டும் தீர்வுகளைக் காண பணியாற்றும்போது நமது முதுகுகளுக்குப் பின்னே ஒரு கை கட்டப்பட்ட நிலையில் இப்பிரச்சனைகளை நம்மால் தீர்க்க இயலாது. பாலியல் சமத்துவம் என்பது வெறுமனே ஒரு சிறந்த யோசனை மட்டுமல்ல; மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு இது அத்தியாவசியமானது. ஸ்டெம் ஸ்காலர்ஷிப்களில் பெண்கள் போன்ற திட்டங்களின் வழியாக தங்களது உயர்கல்வியைப் படிக்கவும் மற்றும் ஸ்டெம் துறைகளில் அவர்களது முழு சாத்தியத்திறனை வெளிப்படுத்தவும் பெண்களுக்குத் தேவைப்படும் நிதிசார் உதவியை வழங்குவதே எமது நோக்கமாகும். இதன்மூலம் ஒரு முழுமையான நிலைமாற்றத்தை உருவாக்கவும் மற்றும் அதிக அர்த்தமுள்ள வழிமுறையில் நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சி இலக்குகளை அடைய பங்களிப்பை செய்யவும் பெண்களை ஏதுவாக்க நாங்கள் முற்படுகிறோம்.” என்று கூறினார். 2020-ம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின் கீழ் 300-க்கும் அதிகமான ஸ்காலர்ஷிப்கள் வழங்கப்பட்டிருக்கிறது. 2023-24 உலகளாவிய கல்வித்திட்டத்தில் தாங்கள் தேர்வு செய்த பாடப் பிரிவுகளில் 92 ஸ்காலர்கள் சேர்ந்திருக்கின்றனர். இதுவரை 52 இந்தியப் பெண்களுக்கு யுகே-ல் ஒரு ஆண்டு முதுகலைப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பும், அதற்கான கல்வி உதவித்தொகையும் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்காலர்ஷிப்களின் வழியாக உலகமயமாகியிருக்கின்ற இவ்வுலகில் வெற்றி காணவும் மற்றும் ஸ்டெம் கல்விப் பிரிவுகளில் உலகளவில் உயர் அங்கீகாரம் பெற்ற கல்வித் தகுதிகளைப் பெறவும் பெண்களுக்கு வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்ற தனது பொறுப்புறுதியை பிரிட்டிஷ் கவுன்சில் செயல்படுத்துகிறது. உயர் தலைமைத்துவ பதவிப் பொறுப்புகளை அடைவதற்கான அவர்களது முன்னேற்றத்திற்கு ஆதரவளிப்பது மற்றும் அவர்களது பிராந்தியத்திலும் மற்றும் யுகேவிலும் சக ஆராய்ச்சியாளர்களோடு இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை வளர்ப்பது ஆகிய குறிக்கோள்களோடு ஸ்டெம் பிரிவுகளில் இளம் பெண்கள் தொடர்ந்து முன்னேற்றம் காண ஊக்குவிப்பதை இந்த ஸ்காலர்ஷிப் இலக்காக கொண்டிருக்கிறது. சார்ந்து வாழும் நபர்களை கொண்டிருக்கும் பெண்களுக்கு கூடுதல் ஆதரவை வழங்கும் இந்த ஸ்காலர்ஷிப் அத்தகைய பெண்களிடமிருந்தும் இதற்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது. இதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதிகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தைச் சார்ந்தும் மாறுபடும்; பொதுவாக மார்ச் மற்றும் ஏப்ரல் 2024-க்கு இடைப்பட்ட காலமாக இது இருக்கும். இந்த ஸ்காலர்ஷிப்புக்கான தகுதிநிலைகள் அல்லது இதில் பங்கேற்கிற யுகே பல்கலைக்கழகங்களின் முழு அட்டவணை, வழங்கப்படுகிற கல்வித் திட்டங்கள் மற்றும் அந்தந்த பல்கலைக்கழகத்திற்கே உரிய காலக்கெடு தேதி ஆகியவை உட்பட பிற தகவலைப் பெற தயவுசெய்து விஜயம் செய்க: https://www.britishcouncil.in/study-uk/scholarships/womenin??????-scholarships <https://www.britishcouncil.in/study-uk/scholarships/womeninstem-scholarships>

# ஜாவா யெஸ்டி மோட்டார்சைக்கிள்ஸ் அதன் மெகா சர்வீஸ் முகாமை சென்னையில் நடத்தவுள்ளது



சென்னை, 07 மார்ச் 2024: ஜாவா யெஸ்டி மோட்டார்சைக்கிள்ஸ் தனது வெற்றிகரமான மெகா சர்வீஸ் முகாமை தமிழகத்தின் சென்னைக்கும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. மாநிலங்கள் முழுவதும் பல வெற்றிகரமான சர்வீஸ் முகாம்களைத் தொடர்ந்து, நான்கு நாள் நிகழ்வு சென்னையில் மார்ச் 7 முதல் மார்ச் 10 வரை நடைபெற உள்ளது. இது பிராந்தியத்தில் உள்ள 2019 மற்றும் 2020 மாடல்களின் ஜாவா மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களுக்கு பிரத்யேகமாக சேவைகளை வழங்குகிறது.

சேவை முகாம் 3 இடங்களில் நடைபெறும்:-

• ராஜ்கமல் மோட்டார்ஸ் - டோர் எண். 135, எண்.19, மவுண்ட் ரோடு, லிட்டில் மவுண்ட், சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு - 600015.

• ஜேஎம்பி மோட்டார்ஸ் - எண்.57, டி.என்.காம்ப்ளக்ஸ், லட்சுமி டாக்கீஸ் சாலை, பில்ரோத் மருத்துவமனை அருகில், ஷெனாய் நகர், சென்னை, தமிழ்நாடு - 600030.

• மேக்ஸ் ஸ்கூட்டர்ஸ் அண்ட் பைக்ஸ் - டோர் எண். 96ஏ, 18வது குறுக்குத் தெரு, நியூ காலனி (அரசு மருத்துவமனை அருகில்), குரோம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு - 600044.

முகாமின் ஒரு பகுதியாக, 2019 முதல் 2020 வரையிலான ஜாவா மோட்டார்சைக்கிள்களின் உரிமையாளர்களுக்கு விரிவான வாகன பரிசோதனை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகங்களை இலவசமாக மாற்றிக்கொள்ளலாம். மோட்டுல், அமரான் மற்றும் சீயட் டயர்ஸ் உட்பட முன்னணி அசல் உபகரண வழங்குநர்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவ முகாமில் பங்கேற்பார்கள். நீண்ட கால வாடிக்கையாளர் திருப்திக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பில், ஜாவா யெஸ்டி மோட்டார்சைக்கிள்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் நீட்டிக்கப்பட்ட உத்தரவாதத்தை வழங்குகிறது. கூடுதலாக, பரிவர்த்தனை மதிப்பை மதிப்பிடுவதற்காகவும், தங்கள் மோட்டார்சைக்கிள்களை மேம்படுத்த ஆர்வமுள்ள உரிமையாளர்களுக்காக முகாமில் தனியாக ஒரு இடம் அமைக்கப்பட்டிருக்கும்.

1000-க்கும் மேற்பட்ட ஜாவா மோட்டார்சைக்கிள்களை சர்வீஸ் செய்த முந்தைய சர்வீஸ் கேம்ப்களின் வெற்றியைத் தொடர்ந்து, வரும் மாதங்களில் பல நகரங்களில் மெகா சர்வீஸ் முகாம்களை பிராண்ட் அறிவிக்க உள்ளது. இந்த முன்முயற்சியானது வாடிக்கையாளர் திருப்திக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் சிறந்த உரிமையாளர் அனுபவத்தை வழங்குவதற்கும் பிராண்டின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஜாவா யெஸ்டி மோட்டார்சைக்கிள்களின் உரிமையாளர்கள் அருகிலுள்ள பிராண்ட் டீலர்ஷிப்பில் தங்களுக்கான முன்பதிவு செய்து கொள்ளலாம். உங்கள் மோட்டார்சைக்கிள் சிறந்த கவனிப்பைப் பெறுவதை உறுதிசெய்து, வாடிக்கையாளர் திருப்திக்கான அர்ப்பணிப்பை நேரடியாக அனுபவிக்கும் இந்த் வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.

# வேதாரண்யம் பகுதியில் பைபர் படகு மீனவர்கள் 9-வது நாளாக வேலை நிறுத்தம்

சென்னை, 07 மார்ச் 2024: இழுவை மடி வலை பயன்படுத்துவதை தடுக்க வலியுறுத்தி வேதாரண்யம் பகுதியில் பைபர் படகு மீனவர்கள் 9-வது நாளாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாகை மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட இழுவைமடி வலையை பயன்படுத்தி ஒரு சில விசைபடகு மீனவர்கள் மீன்பிடிப்பதால் பைபர் படகு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதனால் நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா கோடியக்கரை, ஆறுகாட்டுதுறை, புஷ்பவனம் வாணவன் மகாதேவி உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் உள்ள பைபர் படகு மீனவர்கள் கடந்த 28-ந் தேதி முதல் மீன்பிடிக்க செல்லாமல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் அவர்கள் விசைப்படகு மீனவர்களின் இழுவை மடி வலையை பயன்படுத்துவதால் பைபர் படகு மீனவர்களின் வாழ்வாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது.என வே நாகை மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட இழுவை மடிவலையை பயன்படுத்துவதை தடுக்க மீன்வளத்துறை அதிகாரிகள் கண்காணித்து தீவிரமாக நடவடிக்கை எடுத்து இழுவை மடிவலையை முற்றிலும் அகற்ற நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஏராளமான மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று 9-வது நாளாக கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால் சுமார் ரூ.2 கோடி மீன் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான பைபர் படகுகள் கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாததால் எப்போதும் பரபரப்பாக காணப்படும் கடற்கரை பகுதியில் வெறிச்சோடி காணப்படுகிறது.

# மக்களின் மனசாட்சியாக உள்ள முதலமைச்சர் காங்கிரசுக்கான தொகுதியை வழங்குவார் காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நம்பிக்கை

சென்னை, 07 மார்ச் 2024: தி.மு.கவை விட அ.தி.மு.க அதிக இடங்கள் கொடுத்தாலும், அவர்களுடன் கூட்டணி வைத்துகொள்ள மாட்டோம் என்று காங்கிரஸ் கமிட்டி மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்ட காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் மயிலாடுதுறை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ராஜ்குமார் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து செல்வப் பெருந்தகை செய்தியாளர்களிடம் பேசியதாவது:

தமிழ்நாட்டில் பா.ஜ.க நோட்டா வாக்குகளை விட குறைவாக வாக்குகளையே பெரும். தமிழ்நாடு மக்களின் மனசாட்சியாக இருந்து முதலமைச்சர் ஸ்டாலின் ஆட்சி செய்து வருகிறார். அவர் காங்கிரஸின் மனசாட்சியாகவும், இந்தியா கூட்டணியின் மனசாட்சியாகவும் செயல்படுவார். ஒருபோதும் காங்கிரஸ் கட்சியை குறைத்து மதிப்பிட மாட்டார். மேலும், காங்கிரஸ் கட்சிக்கும் மனசாட்சிப்படி உரிய தொகுதிகளை வழங்குவார் என்று எதிர்பார்க்கிறேன்.

போதைப் பொருள் வருவதற்கு காரணமே ஒன்றிய அரசுதான். முத்ரா துறைமுகம், காண்வா துறைமுகம் என்று இந்த இரு துறைமுகமும், குஜராத்தில் அதானியின் கட்டுப்பாட்டில் உள்ளது. தமிழ்நாட்டிற்கு யார் போதை பொருளை இறக்குகிறார்கள் என்று வெள்ளை அறிக்கை கொடுக்க வேண்டும். பா.ஜ.க ஆட்சியில் எவ்வளவு போதை பொருட்கள் பிடிக்கப்பட்டுள்ளது. எந்த துறைமுகத்திலிருந்து இறக்கப்பட்டுள்ளது என்று வெள்ளை அறிக்கை கொடுக்க வேண்டும்.

இது தேசத்திற்கான தேர்தல். இந்த நாட்டை பாதுகாப்பதற்கான தேர்தல். பாசிச சக்திகளை அகற்றுவதற்கான தேர்தல். எனவே, 400 தொகுதிகளில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும். தி.மு.கவுடன் பல ஆண்டுகளாக கூட்டணியில் உள்ளோம். தி.மு.க-வை விட அதிக இடங்களை ஒதுக்கினாலும் அ.தி.மு.க-வுடன் ஒருபோதும் கூட்டணி சேரமாட்டோம்.

தென் மாவட்டங்கள் பேரிடரால் பாதிக்கப்பட்ட போது ரூ. 37,000 கோடி நிவாரண உதவி கேட்ட நிலையில், பிரதமர் ஒரு பைசா கூடநிதி ஒதுக்கவில்லை. அவர் எந்த முகத்துடன் தேர்தலில் மக்களை சந்திப்பார். எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இரண்டாவது முறையாக அடிக்கல் நாட்டியுள்ள பிரதமர் மோடி, மக்கள் பிரதிநிதிகளை அழைத்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் யாரையும் அழைக்கவில்லை. ராமரை முன்னிறுத்தி தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற மோடியின் எண்ணம் எப்போதும் நிறைவேறாது' என்றும் செல்வப்பெருந்தகை கூறினார்.

# தி.மு.க.வை சேர்ந்த சிம்லா முத்துச்சோழன் அண்ணா தி.மு.க.வில் இணைந்தார்

சென்னை, 07 மார்ச் 2024: தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.சற்குணபாண்டியனின் மருமகள் சிம்லா முத்துச்சோழன் தி.மு.க.வில் இருந்து விலகி எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அண்ணா தி.மு.க.வில் இணைந்தார்.

கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது அவரது அமைச்சரவையில் முக்கிய அமைச்சராக இருந்தவர் சற்குணபாண்டியன். தி.மு.க. துணைப் பொதுச்செயலாளராகவும் இருந்த அவர் சென்னை ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த 2016ம் ஆண்டு ஆர்.கே.நகர் தேர்தலில் ஜெயலலிதாவுக்கு எதிராக தி.மு.க. சார்பில் சிம்லா முத்துச்சோழன் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். கடுமையான போட்டியின் முடிவில் 30 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயலலிதா வெற்றி பெற்றார்.

இந்நிலையில் சிம்லா முத்துச்சோழன் தி.மு.க.விலிருந்து விலகி பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று அண்ணா தி.மு.க.வில் தன்னை இணைத்துக்கொண்டார். இது தி.மு.க.வினர் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.